**<u>சுருக்கம்</u>**

திட்டம் மற்றும் வளர்ச்சி – ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதிகள் – 8 மாடிகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை கட்டடம் / உபகரணங்கள் மற்றும் புதிய பணியிடங்கள் உருவாக்கி உயர் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்த ரூ. 80.81 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது,

---

**<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்–1) துறை</u>**

அரசாணை (நிலை) எண்.520

நாள்: **14.11.2019**
விகாரி, ஐப்பசி – 28
திருவள்ளுவர் ஆண்டு, 2050
படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண்.35658/திவ1/1/2019, நாள்: 29.7.2019

**********

**<u>ஆணை:</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை 2019–20 ஆம் ஆண்டின் மானியக் கூட்ட தொடரின் போது விதி 110–ன் கீழ் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> " ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவு, இருதய நோய் சிகிச்சை பிரிவு, புற்றுநோய் சிகிச்சை பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, குழந்தைகள் நல அறுவை சிகிச்சை பிரிவு, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை பிரிவு, தீக்காய சிகிச்சை பிரிவு, சிறுநீரக சிகிச்சை பிரிவு, சீமாங் பிரிவு போன்ற உயர் சிறப்பு சிகிச்சை அளிக்க ரூ 67.76 கோடி செலவில் உயர் சிறப்பு மருத்துவமனையாக (Super Speciality Hospital) மேம்படுத்தப்படும் "

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தற்போது 608 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது என்றும், வெளிநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் வசதி, ஆய்வு கூட வசதி, மின்னாக்கி, தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம், காசநோய் மையம், தொற்றில்லா நோய் சிகிச்சைப் பிரிவு (NCD) மகப்பேறு முன்கவனிப்பு பிரிவு, மகப்பேறு பின்கவனிப்பு பிரிவு, பச்சிளம் குழந்தைகள் நலப்பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை, கண் சிகிச்சை பிரிவு, தொழுநோய், ஆண்கள் மருத்துவப்பிரிவு, சித்தா பிரிவு, இரத்த சுத்திகரிப்பு, மனநலப்பிரிவு, இரத்த வங்கி, நுண்கதிர் பிரிவு மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்ட சிகிச்சைப் பிரிவு போன்ற பல பிரிவுகளை கொண்டு இம்மருத்துவமனை சிறப்பாக இயங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

3. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக 8 மாடிகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை கட்டடம் / உபகரணங்கள் மற்றும் புதிய பணியிடங்கள்

உருவாக்குவதற்கு ரூ. 84.57 கோடியில் நிர்வாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு அளிக்குமாறு அரசைக் கோரியுள்ளார். அதற்கான பொது பணித்துறையின் தோராய திட்ட மதிப்பீட்டினையும் அனுப்பியுள்ளார்.

4. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த, உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, 8 மாடிகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனைக்கான கட்டடம், உபகரணங்கள் மற்றும் பணியிடங்கள் தோற்றுவிக்க நிர்வாக மற்றும் நிதி ஒப்புளிப்பு செய்ய முடிவு செய்து அரசு கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

1. ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த, உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக 8 மாடிகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனைக்கான கட்டடம் கட்டுவதற்கு ரூ.64.00 கோடி (ரூபாய் அறுபத்தி நான்கு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

2. ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த, 8 மாடிகள் கொண்ட உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கு பிற்சேர்க்கை I – ல் உள்ள புதிய உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.11.02 கோடி (ரூபாய் பதினொரு கோடி இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

3. ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த, 8 மாடிகள் கொண்ட உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கு பிற்சேர்க்கை II– ல் உள்ள 124 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

**<u>மானிய கோரிக்கை 19 – 02</u>**

i) பணியிடங்கள் — 2210 - மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01- நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – ஆங்கில முறை மருத்துவம் – 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – மாநிலச் செலவினங்கள் – AA – மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் – 301 – சம்பளங்கள்
(த. தொ.கு. 2210-01-110-AA-0104)
IFHRMS 22100 – 11 - 110 - AA - 30100

**<u>மானிய கோரிக்கை 39 - 02</u>**

ii) கட்டடங்கள் — 4210 மருத்துவமும் பொது சுகாதாரமும் குறித்த மூலதனச் செலவு – 01 நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் (மருந்தாக்கியல் துறை உட்பட) – மாநிலச் செலவினங்கள் – JA கட்டடங்கள் – 416 பெரும்பணிகள் – 01 பெரும்பணிகள்" (மானியம் 39.02)
( த. தொ.கு.4210–01–110 JA–1602)
IFHRMS 4210 01 110 JA 41601

மானிய கோரிக்கை 19 – 02

iii) உபகரணங்கள் 2210- மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 - நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – ஆங்கில முறை மருத்துவம் – 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – மாநிலச் செலவினங்கள் – AA - மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் – 319 – இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல்
(த. தொ.கு. 2210-01-110-AA-1916)
IFHRMS 2210 01 110 31901

6. மேலும் தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின் மூலம் உபகரணங்கள் வாங்குவதற்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 4 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் மூலதன செலவு குறித்து முதல் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இச்செலவினங்களை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2019–20ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், மேலே பத்தி 5 (i) மற்றும் (iii)–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கு 2019–2020ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் / தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மேலே பத்தி 4 ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019–2020 ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (சுகாதாரம் 2) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் / தலைமைப் பொறியாளர் (கட்டடம் ) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதி துறை அ.சா.கு. எண். 58203 / CMPC / 19, நாள் 14.11.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 2156 (இரண்டாயிரத்து நூற்று ஐம்பத்தாறு) பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது .

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்,**
**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை– 6.
வழியாக இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,
ஈரோடு மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) சேலம் மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை –5

மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநிலத் தலைமைக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18

<u>நகல்</u>

நிதி (சுகாதாரம் – II/வ.செ. பொ–II/ மை.ம.ஆ.பி / பொ.ப.I)த் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(சி1) துறை, சென்னை –9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர்
(மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை) சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை – 9
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

// ஆணைப்பபடி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

14.11.19

**ANNEXURE - I**

| In G.O.(MS).No.520, Health and Family Welfare (F1) Department, Dated: 14.11.2019 | | | | |
|---|---|---|---|---|
| **EQUIPMENTS LIST** | | | | |
| **S. No** | **Name of the Equipments** | **No. of the Equipment** | **Unit cost** | **Total Amount** |
| 1 | Central Oxygen with suction with compressor | Pipe line Wanted | | |
| 2 | Multipara Monitor | 20 | 250000 | 5000000 |
| 3 | Pulse Oxymeter | 10 | 90000 | 900000 |
| 4 | Defibrillator | 3 | 225000 | 675000 |
| 5 | ECG Room | 2 | 180000 | 360000 |
| 6 | Fowlers Cot | 20 | 20000 | 400000 |
| 7 | Nervous conduction System - Equipments | 2 Unit | 100000 | 200000 |
| 8 | Theatre Equipments for Neuro Surgery Central Gas System | Boyle's with instruments | 300000 | 300000 |
| 9 | ECHO Room | 3 | 600000 | 1800000 |
| 10 | Cath Lab | 1 | 40000000 | 40000000 |
| 11 | Hotler Monitor | 4 | 300000 | 1200000 |
| 12 | TMT | 1 | 200000 | 200000 |
| 13 | Cardiac Multipara Monitor | 10 | 250000 | 2500000 |
| 14 | B.P.Apparatus | 20 | 2500 | 50000 |
| 15 | Glucometer | 5 | 4000 | 20000 |
| 16 | Cystoscope and Ureteroscope | 1 | 2000000 | 2000000 |
| 17 | Hepa Filter | 3 for Each Operation Theatre | 15000000 | 45000000 |
| 18 | Work Station with Boyels | 6 | 300000 | 1800000 |
| 19 | Laproscopic Equipments | 1 Set | 1700000 | 5100000 |
| 20 | OT Threatre with LED Light | 3 for Each Operation Theatre | 500000 | 1500000 |
| 21 | Operation Table | 3 | 400000 | 1200000 |
| **Total Amount Approximately** | | | | 110205000 |

**Dr. BEELA RAJESH,**
**SECRETARY TO GOVERNMENT.**

// TRUE COPY //

SECTION OFFICER

14.11.19

**ANNEXURE – II**

**In G.O.(Ms).No.520, Health and Family Welfare (F1) Department, Dated: 14.11.2019**

| வ எண். | பணியிடங்கள் | பணியிடங்களின் எண்ணிக்கை | புதிய திருத்திய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | உதவி மருத்துவர் (Neuro Physician ) | 2 | 56100 – 177500 (Level -22) |
| 2 | உதவி மருத்துவர் (Neuro Surgeon) | 2 | 56100 – 177500 (Level -22) |
| 3 | உதவி மருத்துவர் (Nephrology) | 2 | 56100 – 177500 (Level -22) |
| 4 | உதவி மருத்துவர் (Cardiology ) | 2 | 56100 – 177500 (Level -22) |
| 5 | உதவி மருத்துவர் (Plastic Surgeon) | 2 | 56100 – 177500 (Level -22) |
| 6 | உதவி மருத்துவர் (Radiology) | 1 | 56100 – 177500 (Level -22) |
| 7 | உதவி மருத்துவர் (Surgical Oncology) | 1 | 56100 – 177500 (Level -22) |
| 8 | உதவி மருத்துவர் (Medical Oncology) | 1 | 56100 – 177500 (Level -22) |
| 9 | உதவி மருத்துவர் (Neonatology) | 1 | 56100 – 177500 (Level -22) |
| 10 | உதவி மருத்துவர் (Medical Gastroenterology) | 1 | 56100 – 177500 (Level -22) |
| 11 | உதவி மருத்துவர் (Casuality Medical Officer) | 5 | 56100 – 177500 (Level -22) |
| 12 | செவிலியர் | 40 | 36000 – 114000 (Level -14) |
| 13 | மருந்தாளுநர் | 5 | 35400 – 112400 (Level - 11) |
| 14 | ஆய்வக நுட்பனர் (Grade II) | 5 | 35400 – 112400 (Level - 11) |
| 15 | அறுவை அரங்க உதவியாளர் | 10 | 16500 – 52400 (Level - 3) |
| 16 | செவிலிய உதவியாளர் ( பிரிவு – II) | 20 | 15700 – 50000 (Level - 1) |
| 17 | கதிர்வீச்சாளர் | 2 | 35400 – 112400 (Level - 11) |
| 18 | இருட்டறை உதவியாளர் | 2 | 19500 – 62000 (Level - 8) |
| 19 | X -ray உதவியாளர் | 2 | 16600 – 52400 (Level - 3) |
| 20 | உரைமாவு கட்டுநர் | 2 | 16500 – 52400 (Level - 3) |
| 21 | நிர்வாக அலுவலர் | 1 | 56100 – 177500 (Level - 22) |
| 22 | அலுவலக கண்காணிப்பாளர் | 2 | 36900 – 116600 (Level - 18) |
| 23 | உதவியாளர் | 5 | 20600 – 65500 (Level - 10) |
| 24 | இளநிலை உதவியாளர் | 3 | 19500 – 62000 (Level - 8) |
| 25 | தட்டச்சர் | 2 | 19500 – 62000 (Level - 8) |
| 26 | பதிவுரு எழுத்தர் | 2 | 15900 – 50400 (Level - 2) |
| 27 | அலுவலக உதவியாளர் | 1 | 15700 – 50000 (Level - 1) |
| | மொத்தம் | 124 | |

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
14.11.19